## பெரியவாச்சான் பிள்ளை

## வாழி திருநாமம்

தண்மை சிங்கம் ரோகிணி நாள் தழைக்க வந்தோன் வாழியே
தாரணியில் சங்கநல்லூர் தானுடையோன் வாழியே
புன்மை தவிர் திருவரங்கர் புகழ் உரைப்போன் வாழியே
பூதூர் எதிராசர் தாள் புகழுமவன் வாழியே
மன்புகழ் சேர் சடகோபர் வளம் உரைப்போன் வாழியே
மறை நாலின் பொருள் தன்னைப் பகுத்துரைத்தோன் வாழியே
அன்புடன் உலகாரியர் தம் அடி இணையோன் வாழியே
அபயப்ரதராசர் தாள் அனவரதம் வாழியே

தீதறு நம்பிள்ளை பதம் சென்னி வைப்போன் வாழியே
திருமலையில் மால் பதத்தைச் சிறந்து பெற்றோன் வாழியே
ஆதரவாய்த் தனிச்லோகி அருளினான் வாழியே
ஆழ்வார்கள் சொற்பொருளை அறிந்துரைப்போன் வாழியே
ஓது புகழ்ச் சங்கநல்லூர் உகந்து பெற்றான் வாழியே
உரோகிணி நாள் ஆவணியில் உதித்த பிரான் வாழியே
ஏதமில் எண் மூவாயிரம் இயம்புமவன் வாழியே
எழில் பெரியவாச்சான்பிள்ளை இணை அடிகள் வாழியே

---